சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.51/2020

15.07.2025

வா.சா.1 திரு. தமிழரசன், த/பெ. இராமானுஜம்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எந்த தேதியில் தாவா சொத்தை கிரயம் வாங்கினேன் என்றால் 15.11.2019 ல் கிரயம் வாங்கினேன். முத்துவேல் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன். நான் கிரயம் வாங்கும் போது மூலப்பத்திரங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன். முத்துவேல் சரவணவேல் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கியிருந்தார். சரவணவேலுக்கு அவரது தாயார் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்திருந்தார். செட்டில்மெண்ட் ஆவணத்தில் சரவணவேலின் தாயார் கைரேகை வைத்திருந்தார். செட்டில்மெண்ட் அசல் ஆவணத்தை நான் வாங்கி வைத்துக்கொண்டேனா என்றால் ஆமாம். கைரேகையை பூர்த்தி செய்தவர் யார் என்று கேட்டு விவரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் அந்த ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் பார்த்து தெரிந்துக்கொண்டேன். முத்துவேலின் முகவரி தெரியவில்லை, அவர் வலங்கைமானில் வசித்து வருகிறார். சொத்தை வாங்குவதற்கு இடைத்தரகர் யாரும் வரவில்லை. நானும் முத்துவேலும் பேசிக்கொண்டோம். கிரய பதிவு செய்த அன்று சொத்தை நான் அனுபவம் எடுத்துக்கொள்ளவில்லை. எனக்கு கிரயம் செய்துக்கொடுத்த முத்துவேல் சொத்தை சுவாதீனம் எடுத்துக்கொண்டாரா என்றால் முத்துவேல் தாவா சொத்தில் தனலெட்சுமியை வாடகைக்கு விட்டிருப்பதாக சொன்னார். நான் கிரயம் பெற்ற பின்னிட்டு தனலெட்சுமியிடம் வாடகை என்னிடம் கொடுக்கவேண்டும் இல்லை என்றால் சொத்தை காலி செய்யவேண்டும் என சொன்னேனா என்றால் இல்லை. சரவணவேலின் சொத்தை சுவாதீனம் எடுத்துக்கொண்டார என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தை எக்காலத்திலும் அவரது மகன் சரவணவேலுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சரவணவேல் கடன் ஆவணம் எழுதுவதாக சொல்லி அவரின் தாயாரை அழைத்து சென்று மோசடியாக ஆவணம் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல.

சரவணவேல் மோசடியாக ஆவணம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக முத்துவேலுக்கு ஆவணம் எழுதிவைத்தார் என்றால் சரியல்ல. தனலெட்சுமி முத்துவேலுக்கு அறிவிப்பு கொடுத்தார் என்றாலும் அந்த அறிவிப்பு குறித்து முத்துவேல் என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. 11.11.2019 அன்றே தனலெட்சுமி முத்துவேலுக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டார் என்றாலும் அந்த அறிவிப்பை மறைத்து 15.11.2019 அன்று சொத்தை கிரயம் செய்துக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. கிரயம் முடிந்தவுடன் பிரதிவாதியிடம் சொத்தை சுவாதீனம் ஒப்படைக்கும் படி கேட்டேன். தேதி ஞாபகமில்லை, கிரயம் எழுதிய மறுநாள் கேட்டேன். பிரதிவாதிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும் நான் சொல்வது போல் சொத்தை சுவாதீனம் கொடுப்பதாக தனலெட்சுமி என்னிடம் ஒருநாளும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து தனலெட்சுமிக்கு சொந்தமானது என்றாலும் என்னிடம் எந்தவித அனுமதியும் பெறவேண்டிய அவசியமில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதியும் அவரது மகன் சரவணவேலும் வஞ்சக கூட்டு அமைத்து என் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.தனலெட்சுமி திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.29/2020 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில்உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் இவ்வழக்கில் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கிரயம் எழுதிய பின்னிட்டு தாவா சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றாலும் அதை மறைத்து தாவா சொத்தில் சுவாதீனம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தனலெட்சுமி உரிமையாளர் என்றாலும் தாவா சொத்தை பொறுத்து நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.